# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2007 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க, மீளக் குடியமர்த்துதல் அதிகாரசபைச் சட்டம்

---

*(2007 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 23 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

2007, மாச்சு மாதம் 23 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்

**விலை : ரூபா 18.25** **தபாற் செலவு : ரூபா 7.50**

**2007 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க, மீளக்
குடியமர்த்துதல் அதிகாரசபைச் சட்டம்**

[*2007 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 23 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.*]

*ச.வ.ஓ. 40/2006*

**மீளக்குடியமர்த்துதல் அதிகாரசபை என அழைக்கப்படவேண்டிய அதிகாரசபையொன்றைத் தாபிப்பதற்கும், தேசியக் கொள்கை மற்றும் திட்டம் ஒன்றையும் வகுத்தமைப்பதற்கும், உள்நாட்டில் புலம்பெயர்ந்த ஆட்களையும் அகதிகளையும் மீளக்குடியமர்த் தலைச் செயற்படுத்துவதற்கும், கண்காணிப்பதற்கும், ஒருங்கி ணைப்பதற்குமான தத்துவத்தை அதிகாரசபைக்கு உரித் தாக்குவதற்கும் ; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தி னால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக* **:—**

*சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.*

***1.*** இச்சட்டம் 2007 ஆம் ஆண்டின் 09ஆம் இலக்க, மீளக்குடியமர்த் துதல் அதிகாரசபைச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியதான அத்தகைய தேதியன்று (அது, இதனகத்துப் பின்னர் "நியமிக்கப்பட்ட தேதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

## பாகம் I

### மீளக்குடியமர்த்துதல் அதிகாரசபையைத் தாபித்தல்

*மீளக்குடியமர்த்துதல் அதிகார சபையைத் தாபித்தல்.*

***2.*** (1) (இதனகத்துப் பின்னர் "அதிகாரசபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "மீளக்குடியமர்த்துதல் அதிகாரசபை" எனவழைக்கப்படும் குழுவொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) அதிகாரசபையானது, (1) ஆம் உட்பிரிவினால் அதற்குக் குறித்தளிக்கப்பட்ட பெயரைக்கொண்டு, கூட்டிணைக்கப்பட்ட குழு வொன்றாகவிருத்தல் வேண்டுமென்பதுடன், இடையறாவழி யுரிமையும் பொது இலச்சினையொன்றும் கொண்டிருத்தலும் வேண் டும். அத்துடன் அப்பெயரில் அது வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம்.

*முகாமைச் சபையை அளித்தல்.*

**3.** அதிகாரசபையின் அலுவல்களினது முகாமை, (இதனகத்துப் பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பணிப்பாளர்கள் சபையொன்றுக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்; அது பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் —

(அ) இரு பதவிவழி உறுப்பினர்கள், அவர்கள், —

(i) திறைசேரிச் செயலாளர் அல்லது அவரது பிரதிநிதி ; அத்துடன்

(ii) திட்டம் செயற்படுத்துதல் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது பிரதிநிதி ; அத்துடன்

(ஆ) மீளக் குடியமர்த்தல், மீளவமர்த்தல், புனர்வாழ்வளித்தல், உள்ளகக்கட்டமைப்பு அபிவிருத்தி, நிதி மற்றும் மாகாண நிருவாகம் என்னும் துறைகளில் எண்பிக்கப்பட்ட நிபுணத்துவமுடைய ஆட்களிலிருந்து அமைச்சரினால் பணிப்பாளர்களாக நியமிக்கப்பட்ட (இதனகத்துப் பின்னர் "நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஏழு உறுப்பினர்கள்.

*அதிகாரசபையின் தவிசாளரும் துணைத் தவிசாளரும்.*

**4.** (1) அமைச்சர், நியமிக்கப்பட்ட உறுப்பினர்களிலிருந்து அதிகாரசபையின் தவிசாளரையும் துணைத் தவிசாளரையும் நியமித்தல் வேண்டும்.

(2) தவிசாளரும் துணைத் தவிசாளரும் மூன்றாண்டுகாலப் பகுதியொன்றுக்குப் பதவிவகித்தல் வேண்டும் என்பதுடன், மீள நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதலும் வேண்டும்.

(3) தவிசாளரும், அதிகாரசபையின் பிரதான நிறைவேற்ற லுவலராகவிருத்தல் வேண்டுமென்பதுடன், அதிகாரசபையின் ஒவ்வொரு கூட்டத்திற்கும் தலைமை தாங்குதலும் வேண்டும். அத்துடன், தவிசாளர் வருகை தராதிருக்கையில், துணைத் தவிசாளர் அத்தகைய ஏதேனும் கூட்டத்திற்குத் தலைமைதாங்குதலும் வேண்டும்.

(4) தவிசாளர், சுகவீனம் காரணமாக, இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறேதேனும் காரணத்துக்காகத் தமது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமான இயலாதவராகவிருக்குமிடத்து, துணைத் தவிசாளர் தவிசாளரின் இடத்திற் செயலாற்றுதல் வேண்டும்.

*நியமிக்கப்பட்ட உறுப்பினர்களின் பதவிக் காலங்களும் அவர்கள் அகற்றப்படுதலும் பதவி நீங்குதலும்.*

**5.** (1) சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவரின் பதவிக் காலம் மூன்றாண்டுகளாதல் வேண்டும்.

(2) நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர் அமைச்சருக்கு முகவரியிட்டனுப்பப்படும் கடிதத்தின்மூலம் தமது பதவியிலிருந்து நீக்கலாம் என்பதுடன், அத்தகைய பதவிநீங்கல் அது அமைச்சரினால் ஏற்றுக்கொள்ளப்படும் தேதியன்று பயனுறுதலும் வேண்டும்.

(3) அமைச்சர், குறிக்கப்பட்ட காரணங்களுக்காக, நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவரைப் பதவியிலிருந்து அகற்றலாம்.

(4) பதவியிலிருந்து அகற்றப்பட்டுள்ள நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர், சபையின் உறுப்பினரொருவராக மீளநியமிக்கப்படுவதற்கு அல்லது வேறேதேனும் தன்மையில் அதிகாரசபையினால் சேவையாற்றுதவற்குத் தகவுடையவராதலாகாது.

(5) சபையின் உறுப்பினரொருவர் இறக்குமிடத்து, பதவி நீங்குமிடத்து அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுமிடத்து, அமைச்சர், 5 ஆம் பிரிவின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு, அவரின் இடத்தில் வேறோர் உறுப்பினரை நியமித்தல் வேண்டும்.

*உறுப்பினர்களாக நியமிக்கப்படுவதற்கெதிரான தகைமையீனம்.*

**6.** ஆளொவருவர் –

(அ) பாராளுமன்ற உறுப்பினரொருவராக, மாகாணசபை உறுப்பினரொருவராக அல்லது உள்ளூரதிகாரசபை உறுப்பினரொருவராக இருப்பின் ;

(ஆ) இலங்கையிலுள்ள அல்லது வேறேதேனும் நாட்டிலுள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ் கடனிறுக்கவகையற்றவராக அல்லது வங்கி முறிந்தவராக வெளிப்படுத்தப்பட்டுள்ள ஆளொருவராகவிருப்பதுடன், பொறுப்பு விடுக்கப்படாத கடனிறுக்கவகையற்றவரான அல்லது வங்கி முறிந்தவராக ஆளொருவராகவும் இருப்பின் ;

(இ) இலங்கையிலுள்ள அல்லது வேறேதேனும் நாட்டிலுள்ள ஏதேனும் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட மறியற்றண்டனைத் தீர்ப்புக்கு உட்பட்டுக் கொண்டிப்பின் அல்லது உட்பட்டவராகவிருந்திருப்பின் ;

(ஈ) உடல் அல்லது உளச் சுகவீனத்தினால் இயலாமைக் குட்பட்டவராக இருப்பின் ; அல்லது

(உ) உறுப்பினரொருவருக்குரிய பணிகளை நிறைவேற்றுவதற்கு வேறுவகையில் இயலாதவராக அல்லது தகுதியற்றவராக இருப்பின்,

அதிகாரசபையின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படுவதற்கு அல்லது தொடர்ந்திருப்பதற்குத் தகைமையற்றவராதல் வேண்டும்.

*கூட்ட நடப்பெண்.*

**7**. சபையின் கூட்டத்துக்கான கூட்டநடப்பெண் ஐந்து உறுப்பினர்களாதல் வேண்டுமென்பதுடன், சபையின் கூட்டங்கள் தொடர்பிலும் அத்தகைய கூட்டங்களில் அலுவலர்களைக்கொண்டு நடாத்துதல் தொடர்பிலுமான நடவடிக்கை முறையையும் சபையானது ஒழுங்குபடுத்தலாம்.

*பணிப்பாளர் களிடையேயான வெற்றிடங்கள், சபையின் செயல்கள் நடவடிக்கைகள் முதலியனவற்றை செல்லுபடி யற்றனவாக்காது.*

**8**. சபையின் செயல், முடிபு அல்லது நடவடிக்கை எதுவும், அதன் உறுப்பினர்களிடையே ஏதேனும் வெற்றிடம் இருப்பதன் காரணமாக மட்டும் அல்லது அதன் உறுப்பினர்களுள் எவரினதும் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருப்பதன் காரணமாக மட்டும் செல்லுபடியற்றதாதலாகாது.

*உறுப்பினர்களின் ஊதியம்.*

**9**. சபையின் உறுப்பினர்களுக்கு, நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் அதிகாரசபையின் நிதியத்திலிருந்து ஊதியமளிக்கப்படலாம்.

*அதிகார சபையானது, அரசாங்கத்தின் பொதுக் கொள்கைக்கு இணங்கி யொழுகுதல்.*

**10.** அதிகாரசபையானது, அதன் தத்துவங்களைப் பிரயோகிப்பதிலும், அதன் பணிகளைப் புரிவதிலும், அதன் கடமைகளை நிறைவேற்றுவதிலும், அரசாங்கத்தின் பொதுக் கொள்கையைச் செயற்படுத்தல் தொடர்பாக, அத்தகைய கொள்கைக்கும், அமைச்சரினால் அதற்கு வழங்கப்படும் எவையேனும் பொதுவான அல்லது விசேடமான பணிப்புகளுக்கும் இணங்கியொழுகுதல் வேண்டும்.

*அதிகாரசபையின் இலச்சினை.*

**11.** (1) அதிகாரசபையின் இலச்சினை, சபையானது காலத்துக்குக்காலம் முடிபு செய்யக்கூடியவாறான அத்தகைய ஆளின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும்.

(2) அதிகாரசபையின் இலச்சினை சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றப்படலாம்.

(3) அதிகாரசபையின் இலச்சினை, தவிசாளரினதும் சபையின் இன்னுமோர் உறுப்பினரினதும் சமுகத்திலன்றி ஏதேனும் சாதனத்தில் அல்லது ஆவணத்தில் பொறிக்கப்படுதலாகாது. அவர்கள் இருவரும் தாம் சமுகமாயிருந்தனர் என்பதற்கத்தாட்சியாக அந்தச் சாதனத்தில் அல்லது ஆவணத்தில் கையொப்பமிடுதல் வேண்டும்.

ஆயின், அதிகாரசபையின் இலச்சினை ஏதேனும் சாதனத்தில் அல்லது ஆவணத்தில் பொறிக்கப்படும் நேரத்தில் தவிசாளர் சமுகமாயிருப்பதற்கு இயலாதவராகவிருக்குமிடத்து, அதற்கெனத் தவிசாளரினால் எழுத்தில் அதிகாரமளிக்கப்படும் சபையின் வேறெவரேனும் உறுப்பினர், இவ்வுட்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளுக்கிணங்க அத்தகைய சாதனத்தில் அல்லது ஆவணத்தில் கையொப்பமிடுவதற்குத் தகுதிவாய்ந்தவராதல் வேண்டும்.

(4) அதிகாரசபையின் இலச்சினை எந்தச் சாதனங்களில் அல்லது ஆவணங்களில் பொறிக்கப்படுகின்றதோ அந்தச் சாதனங்கள் அல்லது ஆவணங்கள் பற்றிய இடாப்பொன்றைச் சபையானது பேணுதல் வேண்டும்.

*கிளை அலுவலகங்களைத் தாபித்தல்.*

**12.** அதிகாரசபையானது, இச்சட்டத்தினால் அதற்கு அளிக்கப்பட்ட அல்லது குறித்தளிக்கப்பட்ட தத்துவங்களையும் பணிகளையும் நிறைவேற்றும் நோக்கத்துக்காக அடையாளங் காணப்பட்ட மாவட்டங்களில், அவசியமானவிடத்து, கிளையலுவலகங்களைத் தாபித்துப் பேணலாம்.

## பாகம் II

### குறிக்கோள்களும், பணிகளும், தத்துவங்களும்

*அதிகாரசபையின் குறிக்கோள்கள்.*

**13.** அதிகாரசபையின் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும் :—

(அ) உள்நாட்டில் புலம்பெயர்ந்த ஆட்களையும் அகதிகளையும் காப்பானதும் மதிப்புவாய்ந்ததுமானவொரு முறையில் மீளக் குடியமர்த்துவதனை அல்லது மீளவமர்த்துவதனை உறுதிப்படுத்துதல் ; அத்துடன்

(ஆ) உள்நாட்டில் புலம்பெயர்ந்த ஆட்களும் அகதிகளும் அபிவிருத்திச் செய்முறையினுட் பிரவேசிப்பதனை வசதிப்படுத்துவதன்மூலம் அவர்களுக்குப் புனர்வாழ்வளிப்பதற்கும் உதவுவதற்குமென அவர்களின் மீளக் குடியமர்த்தலை அல்லது மீளவமர்த்துதலை வசதிப்படுத்துதல்.

*அதிகாரசபையின் பணிகள்.*

**14.** அதிகாரசபையின் குறிக்கோள்களை நிறைவேற்றும் நோக்கத்துக்காகப் பின்வரும் பணிகளைப் புரிவதற்கு அதிகாரசபைக்குப் பொறுப்பிக்கப்படுதல் வேண்டும் :—

(அ) உள்நாட்டில் புலம்பெயர்ந்த ஆட்களுக்காகவும் அகதிகளுக்காகவும் மீளக்குடியமர்த்தல் அமைச்சின் கலந்தாலோசனையுடன் மீளக்குடியமர்த்தற் கொள்கையொன்றை வகுத்தமைத்தலும் செயற்படுத்துதலும் ;

(ஆ) ஆட்கள் புலம்பெயர்தலை முடிவுக்குக் கொண்டுவருவதற்கென, அரசாங்கத்தின், நன்கொடையளிப்போரின், சர்வதேச அரசாங்கஞ்சாரா ஒழுங்கமைப்புகளின், குடியியற் சங்க முகவர் நிலையங்களின் மற்றும் தேவைப்பட்ட ஆணைப்பத்திரங்களையும்மூலவளங்களையும் கொண்டுள்ள ஏனையோரின் முயற்சிகளை ஒன்றிணைத்தல் ;

(இ) காப்பானதும் மதிப்புவாய்ந்ததுமானவொரு முறையில் உள்நாட்டில் புலம்பெயர்ந்த ஆட்களையும் அகதிகளையும் மீளக்குடியமர்த்துவதற்கும் மீளவமர்த்துவதற்கும் குறிப்பிட்ட நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் செயற்படுத்துதலும் ;

(ஈ) பிறப்பு, இறப்பு, மற்றும் திருணமச் சான்றிதழ்கள், ஆள டையாள அட்டைகள், ஆதனம் தொடர்பான உறுதிகள் முதலியன போன்ற, காணாமற்போன ஆவணங்கள் மற்றும் ஏதேனும் அரசாங்கத் திணைக்களத்திடமிருந்து அவர்களுக்கு தேவைப்படக்கூடியவேறு ஏதேனும் ஆவணங்களையும் பெறுவதற்கு உள்நாட்டில் புலம் பெயர்ந்த ஆட்களுக்கும் அகதிகளுக்கும் உதவுதல் ;

(உ) உள்ளகக் கட்டமைப்புச் வசதிகளையும், கல்வி மற்றும் சுகாதார வசதிகளையும்வழங்குவதற்கு உதவுதல் ;

(ஊ) மீளக்குடியமர்த்தலையும் மீளவமர்த்துதலையும் வசதிப்படுத்துவதற்கான வீடமைப்புத் திட்டங்களுட்பட, மீளக் குடியமர்த்தல் நிகழ்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்துதல் ;

(எ) திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதி மூலவளங்களைத் திரட்டுவதில் உதவுதல் ;

(ஏ) சொத்தாண்மை மற்றும் அசைவுள்ள, அசைவற்ற சொத்துக்களின் உடைமை, உரிமை என்பன தொடர்பான பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதனை வசதிப்படுத்துதல் ;

(ஐ) உள்நாட்டில் புலம்பெயர்ந்த ஆட்களுக்கும் ஓம்பு சமுதாயத்தினருக்குமிடையே சிறந்த புரிந்துணர்வை ஏற்படுத்துதல் ;

(ஒ) உள்நாட்டில் புலம்பெயர்ந்த ஆட்களுக்குத் தத்துவமளிப்பதற்கான கலாசார உரிமைகளுட்பட, அடிப்படை மனித உரிமைகளை மீளநிலைநாட்டுவதனை வசதிப்படுத்துதல் ;

(ஓ) புலம்பெயர்ந்தோரின் தேவைகள் பற்றிய முறையீடுகளைப் பெறுதலும், தீர்வுகளைக் காணும்படி ஆணை பெற்ற முகவர் நிலையங்களுக்கு அது தொடர்பில் முறையீடுகளைச் செய்தலும் ;

(ஔ) தனிப்பட்ட அல்லது சமுதாயத் தேவைகளுக்கிணங்க, மீள்வதற்கும் அபிவிருத்திக்குமான பங்காண்மைகளை ஆரம்பித்துச் செயற்படுத்துவதற்குப் புலம்பெயர்ந்தோரை ஆள்திரட்டுதல் ;

(க) புலம்பெயர்ந்த ஆட்களுக்கும் அகதிகளுக்குமிடையே வாழ்க்கை வழிவகைகளுக்கான செயற்பாடுகளை மேம்படுத்துதல் ;

(ங) அவர்களின் மீளுகைக்காக இலக்கிடப்பட்ட கொள்கைகள், மூலவளங்கள் மற்றும் செயற்பாடுகள் பற்றிய முன்னேற்றம் என்பன மீதான தகவலை நியாயமான அளவுக்குப் பெறுவதற்காக ஏற்பாடு செய்தலும், சம்பந்தப்பட்ட இடையீடு செய்கின்ற முகவர் நிலையங்களுடன் கலந்துரையாடுதலை வசதிப்படுத்துதலும் ; அத்துடன்

(ச) நிலக் கண்ணிவெடிகளையும் சிதைவுகளையும் அகற்றுவதன்மூலமும் சேதமுற்ற உட்கட்டமைப்பைப் பழுதுபார்ப்பதன் மூலமும் மீளக்குடியமர்த்துதலுக்கு உசிதமான இயன்முறைச் சுற்றாடல் ஒன்றை உறுதிப்படுத்துதல்.

*அதிகாரசபையின் தத்துவங்கள்,*

**15**. அதிகாரசபையானது, அதன் பணிகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக, பின்வரும் தத்துவங்களுள் எல்லாவற்றையும் அல்லது எவற்றையும் பிரயோகிக்கலாம் —

(அ) ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளுதலும் வைத்திருத்தலும், குத்தகைக்கு அல்லது வாடகைக்கு எடுத்தலும் அல்லது கொடுத்தலும், ஈடுவைத்தல், விற்பனை செய்தல் அல்லது வேறு வகையில் கையுதிர்த்தல் என்பனவும் ;

(ஆ) ஒன்றில் அரசிடமிருந்து அல்லது தனிப்பட்ட தனியாட்களிடமிருந்து கொள்ளப்பட்ட காணியைத் துப்புரவு செய்தலும் மீள அபிவிருத்தி செய்தலும் ;

(இ) அதன் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமென அது கொள்ளக்கூடியவாறாக, அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் செய்துகொள்ளுதலும் புரிதலும்; அத்துடன்

(ஈ) காசாக அல்லது வேறு வகையாகக் கொடைகளை, மானியக் கொடைகளை அல்லது நன்கொடைகளை ஏற்றுக் கொள்ளுதலும், அதன் பணிகளை நிறைவேற்றுவதில் அவற்றைப் பயன்படுத்துதலும்.

*ஏதேனும் உடன்படிக் கையைச் செய்து கொள்வதற்கு அதிகார சபைக்குள்ள தத்துவங்கள்.*

**16.** (1) அதிகாரசபையின் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் வினைத்திறனான பிரயோகித்தல், புரிதல் மற்றும் நிறைவேற்றுதலை இயலச் செய்யும் நோக்கத்துக்காக, அதிகார சபையானது, எவையேனும் அரசாங்கத் திணைக்களங்களுடனும், உள்ளூரதிகாரசபைகளுடனும், பகிரங்கக் கூட்டுத்தாபனங்களுட னும், கூட்டுமுயற்சிகள், கம்பெனிகளுட்பட தனிப்பட்ட அல்லது பகி ரங்க வேறெவையேனும் நிறுவனங்களுடன் ஏதேனும் உடன்படிக் கையைச் செய்து கொள்வதற்குத் தத்துவமுடையதாதல் வேண்டும்.

(2) அத்தகைய உடன்படிக்கை ஒவ்வொன்றும் எழுத்திலிருத்தல் வேண்டுமென்பதுடன், அதிகாரசபையுடன் பதிவுசெய்யப்படு வதன்மேல், அத்தகைய அரசாங்கத் திணைக்களம், உள்ளூரதிகார சபைகள், பகிரங்கக் கூட்டுத்தாபனம் அத்துடன் கூட்டுமுயற்சிகள், கம்பெனிகளுட்பட தனிப்பட்ட அல்லது பகிரங்க வேறெ வையேனும் நிறுவனங்களுக்கும் இடையே செல்லுபடியானதும் பிணிக்கின்றதுமான ஒப்பந்தமொன்றாக அமைதலும் வேண்டும்.

*அதிகார சபைக்காக இலங்கைக்கு வெளியே செயலாற்று வதற்கு ஆட்களுக்குத் தத்துவமளித்தல்.*

**17.** சபையானது, எழுத்தில், அதிகாரசபையின் இலச்சினை யின்கீழ் அல்லது அதிகாரசபையினால் ஆக்கப்படும் விதிகளி னால் ஏற்பாடு செய்யப்படக்கூடியவாறான அத்தகைய வேறு முறையில், இலங்கைக்கு வெளியேயுள்ள ஏதேனுமிடத்தில், அதி காரசபைக்காகவும் அதன்சார்பிலும், ஒன்றில் பொதுவாக அல் லது குறிப்பிட்ட ஏதேனும் கருமம் தொடர்பில் செயற்பட வேறெவ ரேனுமாளுக்குத் தத்துவமளிக்கலாம்.

*காணியை வலுக் கட்டாயமாகக் கொள்ளுதல்.*

**18.** (1) ஏதேனும் பெயர் குறிக்கப்பட்ட இடப்பரப்பினுள் உள்ள ஏதேனும் காணி அல்லது ஏதேனும் காணியிலான ஏதேனும் அக்கறை, கருத்திட்டங்களுள் எவற்றையும் செயற்படுத்துவதற்காக அதிகாரசபையினால் தேவைப்படுத்தப்படுமிடத்தும், அமைச்சர், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் உத்தேசக் கொள்ளுதலை அங்கீகரிக்குமிடத்தும், அத்தகைய காணி அல்லது அக்காணியிலான அக்கறை ஒரு பகிரங்க நோக்கத்துக்காகத் தேவைப்படுத்தப்படுகின்றது என்றாற்போன்று அக்காணியானது அல்லது அத்தகைய காணியிலான அக்கறையானது அதற் கிணங்கக் காணிகொள்ளுதற் சட்டத்தின்கீழ் கொள்ளப்படலா மென்பதுடன், அதிகாரசபைக்குக் கைமாற்றவும்படலாம்.

ஆயின், எவ்வாறாயினும், பெயர்குறிக்கப்பட்ட இடப்பரப்பொன்றினுள் அமைந்துள்ள தோட்டமொன்றின் ஏதேனும் காணி அல்லது ஏதேனும் காணியிலுள்ள ஏதேனும் அக்கறை அதிகாரசபையினால் தேவைப்படுமிடத்து, அத்தகைய காணியை அல்லது அத்தகைய காணியிலான அக்கறையைக் கொள்ளுவதற்கான இப்பிரிவின்கீழான கட்டளையொன்றை வெளியிடுமுன்னர், அமைச்சர், பெருந்தோட்டத் தொழில் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சருடன் கலந்தாலோசித்தல் வேண்டும்.

(2) ஏதேனும் பெயர்குறிக்கப்பட்ட இடப்பரப்பினுள் உள்ள ஏதேனும் காணி அல்லது ஏதேனும் காணியிலான ஏதேனும் அக்கறை, அதிகாரசபையின் ஏதேனும் நோக்கத்துக்காகக் காணி கொள்ளுதற் சட்டத்தின்கீழ் கொள்ளப்படவுள்ள ஏதேனும் விடயத்திலும், அக்காணியை அல்லது அக்கறையைக் கொள்ளுதற்கான உட்கருத்துப் பற்றிய பகிரங்க அறிவித்தல், அச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்டவாறு (1) ஆம் உட்பிரிவின்கீழான கட்டளை வெளியிடப்பட்ட தேதியிலிருந்து தொடங்குகின்ற மூன்றாண்டுக் காலப்பகுதியினுள் எந்நேரத்திலேனும் வெளியிடப் படும் ஏதேனும் விடயத்திலும், அச்சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், அக்காணி அல்லது அக்கறை தொடர்பில் செலுத்தப்படவேண்டிய நட்டஈட்டுத் தொகையைத் தீர்மானிக்கும் நோக்கத்துக்காகப் பின்வரும் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும் :—

(அ) அக்காணியின் சந்தைப் பெறுமதியானது, அத்தகைய கட்டளை வெளியிடப்பட்ட தேதியன்று அது கொள்ளப்பட்ட நேரத்தில் கொண்டிருந்த அதே நிலைமையை அது அப்போது கொண்டிருப்பின், அத்தகைய தேதிக்குப் பின்னர் அத்தகைய காணிக்குச் செய்யப்பட்ட உண்மையான சீராக்கல்கள் எவையேனுமிருப்பின் அவை காரணமாக நியாயமானவொரு தொகையினால் அதிகரிக்கப்பட்டவாறு அக்காணி கொண்டிருந்ததாகவிருந்திருக்கக்கூடிய அச்சந்தைப் பெறுமதியாகக் கருதப்படுதல் வேண்டும் ;

(ஆ) அத்தகைய கட்டளையை வெளியிட்ட தேதியிலான அக்காணியின் சந்தைப்பெறுமதியை நிச்சயிப்பதில்,

இச்சட்டத்தைப் பின்பற்றி அதிகாரசபையினாலான ஏதேனும் அபிவிருத்தி வேலையிலிருந்து அல்லது வேறு தொழிற்பாட்டிலிருந்து திரண்டிருக்கக்கூடிய ஏதேனும் நன்மை அல்லது பெறுமதியிலான அதிகரிப்பு அல்லது நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் திரளக் கூடிய சாத்தியங்கொண்ட நன்மையின் அல்லது பெறு மதியிலான அதிகரிப்பின் ஏதேனும் எதிர்பார்ப்பு, கணக் குக்கெடுக்கப்படுதலாகாது.

*அசைவுள்ள அசைவற்ற அரச ஆதனம் அதிகார சபைக்குக் கிடைக்கக்கூடிய தாக்கப்படுதல்.*

**19.** (1) அரசின் ஏதேனும் அசைவற்ற ஆதனம் அதிகார சபையின் ஏதேனும் நோக்கத்துக்காகத் தேவைப்படுமிடத்து, அத்த கைய நோக்கம், (454 ஆம் அத்தியாயமான) முடிக்குரிய காணிகள் கட்டளைச்சட்டத்தின் 6 ஆம் பிரிவின்கீழ் விசேட மானியக்கொடை அல்லது குத்தகை அளிக்கப்படக்கூடிய நோக்கமொன்றாகக் கருதப் படுதல் வேண்டுமென்பதுடன், அக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடு கள், அதிகாரசபைக்கான அத்தகைய ஆதனத்தின் விசேட மானியக் கொடையொன்றுக்கு அல்லது குத்தகையொன்றுக்கு அதற்கிணங்க ஏற்புடையனவாதலும் வேண்டும்.

(2) அரசின் ஏதேனும் அசைவுள்ள ஆதனம் அதிகாரசபையின் ஏதேனும் நோக்கத்துக்காகத் தேவைப்படுமிடத்து, அமைச்சர், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம், அத்தகைய அசைவுள்ள ஆதனத்தின் உடைமையையும் பயன்பாட்டையும் அதிகார சபைக்குக் கைமாற்றலாம் அத்துடன் உரித்தாக்கலாம் :

ஆயின், எவ்வாறாயினும், அரசின் ஏதேனும் அசைவுள்ள ஆத னம் தொடர்பான கட்டளையெதுவும், அத்தகைய ஆதனத்தின் மீதான கட்டுப்பாட்டையுடைய அமைச்சரின் ஒருப்பாடின்றி, இவ்வுட்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின்கீழ் அமைச்சரினால் ஆக்கப்படுதலாகாது.

## பாகம் III

### *நிதி*

*அதிகாரசபையின் நிதியம்.*

**20.** (1) அதிகாரசபை அதன் சொந்த நிதியத்தைக் கொண் டிருத்தல் வேண்டும். பின்வருவன நிதியத்தினுட் செலுத்தப்படுதல் வேண்டும் :-

(அ) அதிகாரசபையின் பயன்பாட்டுக்காகப் பாராளுமன்றத்தினால் காலத்துக்குக்காலம் வாக்களிக்கப்படக்கூடிய வாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ;

(ஆ) இச்சட்டத்தின்கீழ் அதிகாரசபை அதன் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் அதனால் பெறப்படக் கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்;

(இ) இலங்கையினுள்ளாயினுஞ்சரி இலங்கைக்கு வெளியேயாயினுஞ்சரி உள்ள ஏதேனும் மூலத்திலிருந்து அதிகாரசபையினால் பெறப்பட்ட எல்லாக் கடன்களும், நன்கொடைகளும், கொடைகளும் அல்லது மானியக்கொடைகளும் ; ஆயின், அத்தகைய பணத்தொகைகள் வழமையான வரவு செலவுத்திட்டச் செய்முறைமூலம் கணக்கிடப்படுதல் வேண்டும்.

(2) அதிகாரசபையின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(3) அதிகாரசபையின் வருமானமும் செலவினமும், சொத்துக்களும் பொறுப்புக்களும் மற்றெல்லாக் கொடுக்கல்வாங்கல்களும் என்பன பற்றிய தகுந்த கணக்குப்புத்தகங்கள் வைத்திருக்கப்படுவதனை அதிகாரசபை செய்வித்தல் வேண்டும்.

(4) பகிரங்கக் கூட்டுத்தாபனங்களின் கணக்குகளைக் கணக்காய்வு செய்தல் தொடர்பாக அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள், அதிகாரசபையின் கணக்குகளினது கணக்காய்வுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

### அதிகாரசபையின் பணியாட்டொகுதியினர்

*பணிப்பாளர் தலைமையதிபதி.*

**21.** (1) அமைச்சரினால் நியமிக்கப்படும் பணிப்பாளர் தலைமையதிபதியொருவர் இருத்தல் வேண்டும் ; அவர் சபையின் பொதுவான அல்லது விசேடமான பணிப்புக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைய, அதிகாரசபையின் அலுவல்களையும் கொடுக்கல் வாங்கல்களையும் பணித்தலும், அதன் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும், பிரயோகித்தலும், புரிதலும் நிறைவேற்றுதலும்

மற்றும் அதிகாரசபையின் அலுவலர்களையும் சேவையாளர்களையும் நிருவகித்தலும் கட்டுப்படுத்துதலும் என்பவற்றுக்கும் பொறுப்பாகவிருத்தல் வேண்டும்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதி, அதிகாரசபையின் அங்கீகாரத்துடன், இச்சட்டத்தினால் அவருக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர்மீது சுமத்தப்பட்ட அல்லது அவருக்குக் குறித்தளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியை எவரேனும் அலுவலருக்கு அல்லது சேவையாளருக்குக் கையளிப்பது அவசியமென அவர் கொள்ளுகின்றபோதெல்லாம் அவ்வாறு கையளிக்கலாமென்பதுடன், அத்தகைய அலுவலர் அல்லது சேவையாளர், பணிப்பாளர் தலைமையதிபதியின் பொதுவான அல்லது விசேடமான பணிப்புகளுக்கமைய, அத்தகைய தத்துவத்தை, கடமையை அல்லது பணியைப் பிரயோகித்தலும், புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டும்.

*அதிகாரசபையின் பணியாட்டொகுதியினர்.*

**22.** (1) அதிகாரசபையானது, அதன் பணிகளை வினைத்திறனுடன் நிறைவேற்றுவதற்கு அவசியமென அது கொள்ளுகின்றவாறான அத்தகைய அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட அலுவலர்களுக்கும் சேவையாளர்களுக்கும், நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளருடனான கலந்தாலோசனையுடன், அமைச்சரின் அங்கீகாரத்துடன் அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகையவொரு முறையிலும் அத்தகைய வீதங்களிலும் ஊதியமளிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய சேவை நிபந்தனைகளுக்கு அவர்கள் அமைந்தோராதலும் வேண்டும்.

(3) அதிகாரசபையின் வேண்டுகோளின்பேரில், பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர், அவ்வலுவலரினதும், அரசாங்க நிருவாகம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினதும் சம்மதத்துடன், அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு, அதிகாரசபையின் அலுவலருக்கு தற்காலிகமாக நியமிக்கப்படலாம், அல்லது அதே சம்மதத்துடன் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(4) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர், அதிகார சபையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படு மிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசியப் போக்கு வரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அவருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(5) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் அதிகார சபையின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படு மிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசியப் போக்கு வரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரி வின் ஏற்பாடுகள், அவருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்றமாற் றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(6) குறித்துரைக்கப்பட்டவொரு காலப்பகுதிக்கு அரசாங்கத்துக் குச் சேவையாற்றுவதற்கு உடன்பட்டுள்ள எவரேனுமாளை அதிகாரசபை தொழிலுக்கமர்த்துமிடத்து, அவ்வாளினால் அதி காரசபைக்கு ஆற்றப்படும் ஏதேனும் சேவைக்காலப்பகுதி, அத்த கைய உடன்படிக்கையின் கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத் துக்காக, அரசாங்கத்துக்கான சேவையாகக்கொள்ளப்படுதல் வேண்டும்.

(7) அதிகாரசபையின் வேண்டுகோளின்பேரில், உள்ளூராட்சிச் சேவையின் எவரேனும் உறுப்பினர் அல்லது உள்ளூரதிகார சபையொன்றின் வேறெவரேனும் அலுவலர் அல்லது சேவையா ளர்கள் அத்தகைய உறுப்பினரின், அலுவலரின் அல்லது சேவை யாளரின் சம்மதத்துடனும், விடயத்துக்கேற்ப, உள்ளூராட்சிச் சேவை ஆணைக்குழுவின் அல்லது உள்ளூரதிகாரசபையின் சம்மதத்துடனும், அதே சம்மதத்துடன் அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக் கப்படலாம் அல்லது விடயத்துக்கேற்ப, அதிகாரசபையினாலும் உள்ளூராட்சிச் சேவை ஆணைக்குழுவினாலும் அந்த உள்ளூரதி காரசபையினாலும் உடன்பட்டுக்கொள்ளப்படக்கூடியவாறாக, (அதே சம்மதத்துடன் ஓய்வூதிய அல்லது சகாய நிதிய உரிமைகள் தொடர்பானவையுட்பட்ட) அத்தகைய நியதிநிபந்தனைகளின் மீது அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்பட லாம்.

(8) உள்ளூராட்சிச் சேவையின் எவரேனும் உறுப்பினர் அல்லது ஏதேனும் உள்ளூரதிகாரசபையின் எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர், (7) ஆம் உட்பிரிவின்கீழ் அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து, அவர், இந்த அதிகாரசபையின் பணியாட்டொகுதியினது வேறெவரேனும் உறுப்பினர் அமைந்தவராகவுள்ள அதே ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டுக்கு அமைந்தவராதல் வேண்டும்.

*பகிரங்கக் கூட்டுத்தாபனங்களின் அலுவலர்களையும் சேவையாளர்களையும் அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்கு நியமித்தல்.*

**23.** (1) அதிகாரசபையின் வேண்டுகோளின்பேரில், பகிரங்கக் கூட்டுத்தாபனமொன்றின் எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர், அத்தகைய அலுவலரின் அல்லது சேவையாளரின் சம்மதத்துடனும் அத்தகைய கூட்டுத்தாபனத்தின் ஆளுகின்ற சபையின் சம்மதத்துடனும், அதே சம்மதத்துடன் அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதே சம்மதத்துடன் அதிகாரசபையினாலும் அத்தகைய கூட்டுத்தாபனத்தின் ஆளுகின்ற சபையினாலும் உடன்பட்டுக்கொள்ளப்படக்கூடியவாறாக, ஓய்வூதிய அல்லது சகாய நிதிய உரிமைகள் தொடர்பானவையுட்பட்ட அத்தகைய நியதிநிபந்தனைகளின்மீது அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(2) எவரேனுமாள் தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ (1) ஆம் உட்பிரிவின்கீழ் அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்கு நியமிக்கப்படுமிடத்து, அதிகாரசபையின் பணியாட்டொகுதியினது வேறெவரேனும் உறுப்பினர் அமைந்தவராகவுள்ள அதே ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டுக்கு அவர் அமைந்தவராதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் நோக்கத்துக்காக, ஒரு பகிரங்கக் கூட்டுத்தாபனம் தொடர்பாக "ஆளுகின்ற சபை" என்பது, அந்தப் பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் நிருவாகமும் முகாமையும் எந்தப் பணிப்பாளர் சபைக்கு அல்லது வேறு குழுவுக்கு உரித்தாக்கப்பட்டுள்ளனவோ அந்தப் பணிப்பாளர் சபை அல்லது வேறு குழு என்று பொருளாகும்.

## பொது

*சபையின் தத்துவங்களைக் கையளித்தல்.*

**24.** அதிகாரசபையானது, எழுத்தில், பணிப்பாளர் தலைமை யதிபதிக்கு அல்லது அதிகாரசபையின் எவரேனும் அலுவலருக்கு அல்லது சேவையாளருக்கு அல்லது ஏதேனும் அரசாங்கத் திணைக்கள அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் எவரேனும் அலுவலருக்கு அத்தகைய அலுவலரின் சம்மதமுடன், அதிகார சபைக்குரித்தாக்கப்பட்ட அல்லது குறித்தளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை அல்லது பணியைப் பிரயோகித்தலை அல்லது நிறைவேற்றுதலைக் கையளிக்கலாம். அதிகாரசபையானது அத்தகைய ஏதேனும் கையளிப்பு எவ்வாறிருப்பினும், அவ்வாறு கையளிக்கப் பட்ட அத்தகைய ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியைப் பிரயோகிக்கலாம், புரியலாம் அல்லது நிறைவேற்றலாம்.

*அமைச்சரினால் அங்கீகரிக்கப் பட்டாலொழிய, உறுப்பினரொருவர் அக்கறை கொண்டுள்ள தொழில் முயற்சிகளுடன் அதிகாரசபையானது தொழில் கொண்டு நடாத்துதலாகாது.*

**25.** அதிகாரசபையின் உறுப்பினரொருவர் எந்தத் தொழில் முயற்சியில் பங்காளர் ஒருவராக, பணிப்பாளர் ஒருவராக அல்லது பங்குதாரர் ஒருவராக உள்ளாரோ அல்லது வேறெந்த வகையிலும் நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் அக்கறைகொண் டுள்ளாரோ, அந்தத் தொழில்முயற்சியொன்றில், அதிகார சபையானது, அமைச்சரினால் கொடுக்கல்வாங்கல் அங்கீகரிக்கப் பட்டாலொழிய, ஏதேனும் முதலீட்டைச் செய்தலாகாது அல்லது வேறுவகையில் அதனுடன் தொழில் கொண்டுநடாத்துதலாகாது.

*அமைச்சரின் பணிப்புகள்.*

**26.** (1) அமைச்சர், அதிகாரசபையின் கடமைகளைப் புரிதலும் தத்துவங்களைப் பிரயோகித்தலும் பற்றிப் பொதுவான அல்லது விசேடமான பணிப்புகளை எழுத்தில் அதிகாரசபைக்கு விடுக்க லாம். அத்தகைய பணிப்புகளுக்கு இணங்கியொழுகுதல் அதிகார சபையின் கடமையாதல் வேண்டும்.

(2) அதிகாரசபையின் ஆதனமும் செயற்பாடுகளும் தொடர்பி லான விபரத்திரட்டுகளையும், கணக்குகளையும், ஏனைய தகவ லையும் அமைச்சர் தேவைப்படுத்தக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் தமக்குக் கொடுத்துதவும்படி அவர் காலத்துக்குக் காலம் எழுத்தில் அதிகாரசபையைப் பணிக்கலாம். அத்தகைய பணிப்புக்கு இணங்கியொழுகுதல் அதிகாரசபையின் கடமையா தல் வேண்டும்.

*இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் அதிகாரசபையானது அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல்.*

**27.** (52 ஆம் அத்தியாயமான) இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் அதிகாரசபையானது அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற் கிணங்கப் பொருள்கொள்ளப் படுதலும் வேண்டும்.

*அதிகாரசபையின் உறுப்பினர்களும், அலுவலர்களும் சேவையாளர் களும் பகிரங்க சேவையாளர் களாகக் கருதப்படுதல்.*

**28.** அதிகாரசபையின் எல்லா உறுப்பினர்களும், அலுவலர்களும், சேவையாளர்களும், 19 ஆம் அத்தியாயமான தண்டனைச் சட்டக்கோவையின் கருத்தெல்லைக்குள்ளும் அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

*இச்சட்டத்தின்கீழ் அல்லது அதிகார சபையின் பணிப்பின்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைக் கான பாதுகாப்பு.*

**29.** (1) துடர்ச்சி அல்லது குற்றவழக்கெதுவும் -

(அ) இச்சட்டத்தின்கீழ் அதிகாரசபையினால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும்செயலுக்காக அதிகாரசபைக்கெதிராக; அல்லது

(ஆ) இச்சட்டத்தின்கீழ் அல்லது அதிகாரசபையின் பணிப்பின்மீது அதிகாரசபையின் எவரேனும் உறுப்பினரினால், அலுவலரினால், சேவையாளரினால் அல்லது முகவரினால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக்கொள்ளப்பட்ட ஏதேனும் செயலுக்காக அவருக்கெதிராக,

அமைவதாதலாகாது.

(2) ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் அதிகாரசயைினால் அல்லது அதற்கெதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அதிகாரசபையினால் உறப்பட்ட ஏதேனும் செலவு, அதிகாரசபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அதிகாரசபைக்குச் செலுத்தப்பட்ட அல்லது அதனால் அறவிடப்பட்ட எவையேனும் செலவுத் தொகைகள், அதிகாரசபையின் நிதியத்துக்கு வரவுவைக்கப்படுதலும் வேண்டும்.

(3) இச்சட்டத்தின்கீழ் அல்லது அதிகாரசபையின் பணிப்பின் மீது (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியிற் குறிப்பீடு செய்யப்படுகின்றவாறான அத்தகைய எவரேனுமாளினால் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக்கொள்ளப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் அவருக்கெதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அவரினால் உறப்பட்ட ஏதேனும் செலவு, அத்தகைய செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதென நீதிமன்றம் கொண்டால், அத்தகைய செலவு அத்தகைய துடர்ச்சியில் அல்லது குற்ற வழக்கில் அவரினால் அறவிடப்பட்டாலொழிய, அதிகாரசபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

ஒழுங்கு விதிகள்.

**30.** (1) அமைச்சர், அதிகாரசபையுடனான கலந்தாலோசனையுடன், விதித்துரைக்கப்படவேண்டுமென இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்ட கருமங்கள் தொடர்பில் அல்லது எக்கருமங்கள், தொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படவேண்டுமென அதிகாரமளிக்கப்படுகின்றதோ அக்கருமங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) அமைச்சரினால் ஆக்கப்படும் ஒவ்வோர் ஒழுங்குவிதியும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது ஒழுங்குவிதியிற் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும் ; அத்துடன் அது, இதன்கண் சட்டமாக்கப்பட்டாற்போன்று செல்லுபடியுள்ளதாகவும் பயனுள்ளதாகவும் இருத்தல் வேண்டும்.

(3) ஒவ்வோர் ஒழுங்குவிதியும், அது வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பின்னர் வசதியானளவு விரைவாக அங்கீகாரத்துக்காகப் பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் ஒழுங்குவிதி, அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) ஏதேனும் ஒழுங்குவிதி அவ்வாறு ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படும் தேதி பற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

**31.** (1) அதிகாரசபையானது - விதிகள்.

(அ) கூட்டங்களிலான நடவடிக்கைமுறையையும் கூட்டங்களில் அலுவல்களைக் கொண்டுநடாத்துதலையும் ஒழுங்குபடுத்துவதற்கானவையும் ; அத்துடன்

(ஆ) அதிகாரசபையின் இலச்சினையின் கட்டுக்காப்புக்காகவும் அதனைப் பொறிக்கும் முறைக்காகவும் ஏற்பாடுசெய்கின்றவையும்,

ஆன விதிகளை ஆக்கலாம்.

(2) அதிகாரசபையினால் ஆக்கப்படும் விதிகள் ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

**32.** இச்சட்டத்தின் ஏற்பாடுகள் நடைமுறைக்கு வருகின்ற தேதியிலிருந்து ஆறாண்டு காலப்பகுதியொன்றுக்கு அவை நடைமுறையிலிருத்தல் வேண்டும். சட்டமானது ஆறாண்டு காலப் பகுதிக்கு நடைமுறையிலிருத்தல்.

**33.** அதிகாரசபையானது, நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன், 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் நியதிகளின்படி அனுமதிக்கப்படுகின்றவாறான அத்தகைய அளவுக்கு அதிகாரசபையின் வருமானம் அல்லது இலாபங்கள்மீதான ஏதேனும் வரியின் கொடுப்பனவிலிருந்து விலக்களிக்கப்பட்டதாதல் வேண்டும். தீர்வைகள் முதலிய வற்றின் கொடுப்பனவுகளிலிருந்து அதிகாரசபைக்கு விலக்களித்தல்.

**34.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**35.** இச்சட்டத்தின் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய - பொருள் கோடல்.

"உள்நாட்டில் புலம்பெயர்ந்த ஆட்கள் (உபுஆ)" என்பது, பொதுவாக நிலவுகின்ற வன்செயலின் ஆயுதந்தாங்கிய மோதல் நிலைமைகளின் விளைவாக அல்லது இந் நிலைமைகளின் தாக்கங்களைத் தவிர்ப்பதற்கென, குறிப்

பாகத் தமது வீடுகளிலிருந்து அல்லது வழமையான வதிவிடங்களிலிருந்து ஓடிப்போவதற்கு அல்லது அவற்றை விட்டுச்செல்வதற்கு வலுக்கட்டாயப்படுத்தப்பட்டவரான அல்லது கடப்பாடுடையவரான ஆட்கள் என்று பொருளாகும் ;

"உள்ளூரதிகாரசபை" என்பது, ஏதேனும் மாநகரசபை, நகரசபை மற்றும் பிரதேசசபை என்று பொருளாகுமென்பதுடன், அத்தகைய ஏதேனும் சபையினால் பிரயோகிக்கப்பட்ட, புரியப்பட்ட மற்றும் நிறைவேற்றப்பட்ட தத்துவங்களுக்கும், கடமைகளுக்கும், பணிகளுக்கும் நேரொத்தவையான அல்லது ஒத்தவையான தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்டுத் தாபிக்கப்பட்ட ஏதேனும் அதிகாரசபையையும் உள்ளடக்கும் ;

"பகிரங்கக் கூட்டுத்தாபனம்" என்பது, மானியக்கொடைகள் மற்றும் கடன் என்றவகையாக அல்லது வேறுவகையாக அரசாங்கத்தினால் முழுமையாக அல்லது பகுதியளவில் வழங்கப்பட்ட நிதிகளை அல்லது மூலதனத்தைக் கொண்டு 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டம் அல்லது வேறு எந்தச் சட்டம் அதனிடத்தில் பதிலிடப்படுகின்றதோ அந்த வேறு ஏதேனும் சட்டம் தவிர்ந்த வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட அல்லது தாபிக்கப்படுகின்ற ஏதேனும் கூட்டுத்தாபனம், சபை அல்லது வேறு குழு என்று பொருளாகும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்